பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

23 11 2024 6 30
சனிக்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. மகாராஷ்டிராவில் பிஜேபி தலைமையிலான கூட்டணியும், ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா – காங்கிரஸ் கூட்டணியும் மீண்டும் ஆட்சியை பிடிக்கும் நிலையில் உள்ளன.
2. மகாராஷ்டிரா சட்டப்பேரவைத் தேர்தலில் தங்களது கூட்டணிக்கு வரலாற்று சிறப்புமிக்க வெற்றியை அளித்த மக்களுக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி நன்றி தெரிவித்துள்ளார்.
3. தமிழகத்தில் வணிக நிறுவனங்களின் பெயர் பலகைகளை தமிழில் இடம்பெறுவதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு எடுத்து வருவதாக தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் திரு மு பெ சாமிநாதன் தெரிவித்துள்ளார்.
4. தென்கிழக்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இரண்டாவது நாளான இன்று இந்தியா 218 ரன் முன்னிலை பெற்றுள்ளது.

----- இனி விரிவான செய்திகள் ---

**[]<<<>>>[]**

சட்டப்பேரவை தேர்தல் நடைபெற்ற மகாராஷ்டிராவில் பிஜேபி தலைமையிலான கூட்டணியும், ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா – காங்கிரஸ் கூட்டணி மீண்டும் ஆட்சியை பிடிக்கும் நிலையில் உள்ளன.

மகாராஷ்ட்ராவில் மொத்தம் உள்ள 288 தொகுதிகளில் பிஜேபி கூட்டணி -128--- தொகுதிகளில் வெற்றிபெற்று -103- தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது.

பிஜேபி 67-- தொகுதிகளில் வெற்றிபெற்று -66-- தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது.

ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவ்சேனா -33- தொகுதிகளில் வெற்றிபெற்று -24- தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது.

அஜித் பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் 28 தொகுதிகளில் வெற்றிபெற்று 13 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது.

காங்கிரஸ் கூட்டணி -27-- தொகுதிகளில் வெற்றிபெற்று -20-- தொகுதிகளில் முன்னிலையில் உள்ளன.

காங்கிரஸ் கட்சி -6- தொகுதிகளில் வெற்றிபெற்று -9- தொகுதியில் முன்னிலையில் உள்ளன.

அதன் கூட்டணி கட்சியான சரத்பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் -6- தொகுதிகளில் வெற்றிபெற்று -4- தொகுதியில் முன்னிலை வகிக்கிறது.

சமாஜ்வாதி கட்சி இரண்டு தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளது.

உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவ்சேனா -13- தொகுதிகளில் வெற்றிபெற்று -7- தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது.

**[]<<<>>>[]**

81 உறுப்பினர்களை கொண்ட ஜார்கண்ட் மாநில சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில்,

ஆளும் ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா -33-- தொகுதிகளில் வெற்றிபெற்று -3- தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது.

அதன் கூட்டணி கட்சிகளான காங்கிரஸ் -16- தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளது.

ராஷ்ட்ரிய ஜனதாதள் -4- தொகுதிகளில் வெற்றிபெற்று மூன்று தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது.

பிஜேபி -22- தொகுதிகளில் வெற்றிபெற்று -3- தொகுதியில் முன்னிலை வகிக்கிறது.

**[]<<<>>>[]**

வயநாடு மக்களவைத் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் திருமதி பிரியங்கா காந்தி ஆறு லட்சத்து 22 ஆயிரத்து 338 வாக்குகள் பெற்று வெற்றிபெற்றுள்ளார்.

தமக்கு அடுத்தப்படியாக வந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் திரு சத்யன் **Mokery-**யை விட நான்கு லட்சத்திற்கும் கூடுதலான வாக்குகளை பெற்றுள்ளார்.

**[]<<<>>>[]**

மகாராஷ்ட்ரா மாநிலம் **Nanded** மக்களவைத் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் பிஜேபி வேட்பாளர் டாக்டர் **Santukrao Marotrao Hambarde**, முன்னிலையில் உள்ளார்.

அவர் தமக்கு அடுத்தபடியாக வந்த காங்கிரஸ் வேட்பாளர் திரு **Ravindra Chavan -** விட மூன்று லட்சத்திற்கும் கூடுதலாக வாக்குகள் பெற்று முன்னிலை வகிக்கிறார்.

**[]<<<>>>[]**

மகாராஷ்டிரா சட்டப்பேரவைத் தேர்தலில் தங்களது கூட்டணிக்கு வரலாற்று சிறப்புமிக்க வெற்றியை அளித்த மக்களுக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி நன்றி தெரிவித்துள்ளார்.

தங்களது கூட்டணியின் நல்லாட்சிக்கு கிடைத்த வெற்றியாக இதனை தாம் கருதுவதாக அவர் கூறியுள்ளார்.

மகாராஷ்டிராவின் வளர்ச்சிக்கு தமது கூட்டணி தொடர்ந்து பாடுபடும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் பிரச்சினைகளை தீர்ப்பதிலும், மாநிலத்துக்காக உழைப்பதிலும் முன் நிற்போம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜார்க்கண்ட் மாநிலத்திலும் பிஜேபி-க்கு வாக்களித்த மக்களுக்கு பிரதமர் நன்றி தெரிவித்துள்ளார்.

அம்மாநிலத்தில் ஆட்சி அமைக்க உள்ள திரு ஹேமந்த் சோரன் தலைமையிலான ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கூட்டணிக்கு தமது வாழ்த்துக்களை தெரிவிப்பதாகவும் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடியின் சீரிய முயற்சியால் கடந்த பத்து ஆண்டுகளில் நாட்டின் பொருளாதாரம் பெரிய அளவில் வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு கஜேந்திரசிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தேசிய நினைவுச் சின்ன ஆணையத்தின் 14-வது நிறுவன நாள் விழாவில் பேசிய அவர், நாட்டின் பாரம்பரியத்தை எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு செல்லும் வகையில் பழம்பெருமை மிக்க நினைவுச் சின்னங்களை பாதுகாக்க வேண்டியது அவசியம் என்று கூறினார்.

சீர்மிகு கலாச்சார அடையாளம் காரணமாக இந்தியாவுக்கு உலகம் முழுவதிலும் அங்கீகாரம் கிடைத்திருப்பதாகத் தெரிவித்த அவர், யோகாசனம், சிற்பக்கலை போன்றவைகளுக்கும் உலக அளவில் பெரும் வரவேற்பு இருப்பதாகக் கூறினார்.

அரிய நினைவுச் சின்னங்களை பன்னெடுங்காலமாக பாதுகாத்து வரும் தேசிய நினைவுச் சின்ன ஆணையத்தின் பணிகளை பாராட்டுவதாகவும் திரு கஜேந்திரசிங் ஷெகாவத் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்துபேசும் 116-வது மன் கி பாத் நிகழ்ச்சி, அகில இந்தியா வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்பு செய்கிறது.

இது இரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பும் செய்யப்படும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் வணிக நிறுவனங்களின் பெயர் பலகைகளை தமிழில் இடம்பெறுவதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு எடுத்து வருவதாக தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் திரு மு பெ சாமிநாதன் தெரிவித்துள்ளார்.

தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தில் இன்று தமிழ்கூடல் மாநாட்டை தொடங்கி வைத்து பேசிய அவர், உலக தமிழ் சங்கத்தின் மூலம் மாநில அரசு உலக தமிழர்களுக்கு விருது வழங்குவதற்கான பல திட்டங்களை செயல்படுத்தி வருவதாகக் கூறினார்.

*( சவுண்ட்பைட் - சாமிநாதன் ) -38--- செகண்ட்*

**[]<<<>>>[]**

தமிழ்நாட்டில் இரண்டாம் கட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்த முகாம் இன்று அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் நடைபெற்றது.

வரும் ஜனவரி மாதம் ஒன்றாம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு நடைபெறும் இந்த முகாமில் 18 வயது பூர்த்தியடைந்தவர்கள் தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளலாம்.

வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைத்தல், பெயர் நீக்கம், முகவரி மாற்றம் உள்ளீட்டவற்றுக்கும் விண்ணப்பிக்கலாம்.

மாநிலம் முழுவதும் இந்த சிறப்பு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்த முகாம் நாளையும் நடைபெறுகிறது.

**[]<<<>>>[]**

உள்ளாட்சி தினத்தையொட்டி தமிழகம் முழுவதும் இன்று கிராம சபைக் கூட்டங்கள் நடைபெற்றன.

இந்த கூட்டத்தில் கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் மத்திய மாநில அரசுகளின் திட்டங்கள், அதன் பயன்பாடு, மக்கள் நலத் திட்டங்களுக்கான பயனாளிகள் தேர்வு செய்யப்படும் முறை உள்ளிட்டவை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கைகள் குறித்த மனுக்களும் பெறப்பட்டன.

[]<<<>>>[]

தென்கிழக்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

இது மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து காற்றழுத்த தாழவுமண்டலமாக வலுப்பெறக்கூடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

*( சவுண்ட்பைட் - செ க ) --48-- செகண்ட்*

இதன் காரணமாக மீனவர்கள் இன்று முதல் வரும் 27-ஆம் தேதி வரை ஆழ்கடல் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

[]<<<>>>[]

ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணையின் நீர்பிடிப்புப் ப.குதிகளில் பெய்து வரும் மழை காரணமாக அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

[]<<<>>>[]

பெரம்பலூர் மாவட்டத்தில் குறு தொழில் உற்பத்தி நிறுவனங்களுக்கு ஏழு சதவீத வட்டியில் 20 லட்சம் ரூபாய் வரை அசையா சொத்து அடமானத்தி.ன் பேரில் கடன் வழங்கப்பட உள்ளதாகவும், தொழில் முனைவோர் இதனை பயன்படுத்திக் கொள்ளுமாறும் ஆட்சியர் திருமதி கிரேஸ் பச்சாவ் கேட்டுக் கொண்டுள்ளார்.

[]<<<>>>[]

ராமநாதபுரம் தேசிய நெடுஞ்சாலையில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் மூன்று பேர் உயிரிழந்தனர்.

[]<<<>>>[]

காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் முகாம் நாளை நடைபெறுகிறது.

[]<<<>>>[]

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இரண்டாம் நாளான இன்று, இந்தியா இரண்டாவது இன்னிங்சில் ஆட்டநேர இறுதியில் விக்கெட் இழப்பின்றி 172 ரன் எடுத்துள்ளது.

ஜெய்ஸ்வால் 90 ரன்னுடனும், கே எல் ராகுல் 62 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

தற்போது இந்திய அணி 218 ரன் முன்னிலை பெற்றுள்ளது.

பெர்தில் நடைபெற்று வரும் இப்போட்டியில் ஏழு விக்கெட் இழப்பிற்கு 67 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் முதல் இன்னிங்சை தொடர்ந்து ஆடிய ஆஸ்திரேலியா, 104 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

பும்ரா அபாரமாக பந்துவீசி ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்தியா முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 150 ரன்.

[]<<<>>>[]

சேலத்தில் நடைபெற்று வரும் தென்னிந்திய அளவிலான பளுதூக்கும் போட்டியில் 250-க்கும் மேற்பட்ட வீரர் வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

மூன்று நாட்கள் நடைபெறும் இப்போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் வெற்றிபெறும் வீரர்கள் தேசிய அளவிலான பளுதூக்கும் போட்டியில் பங்கேற்கவுள்ளனர்.

***End of News***